**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

முன்னிலை: திரு. பி.எஸ். ரஸ்கின் ராஜ், பி.ஏ., எல்.எல்.பி.,
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 16–ம் நாள் திங்கட்கிழமை

**உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டு வழக்கு எண்.01/2026**
**(CNR.No.TNMD240000262026)**

வெள்ளைச்சாமி ... மேல்முறையீட்டாளர்கள்/மனுதாரர்

// எதிராக //

1) விமலீஸ்வரபாண்டியன்
2) சின்னச்சாமி (இறப்பு)
3) முத்தையா ... எதிர்மேல்முறையீட்டாளர்/ எதிர்மனுதாரர்கள்

வாதியால், இம்மேல்முறையீடானது, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம் உசிலம்பட்டி, ஐ.ஏ.எண். 434/2023– இன் – அசல் வழக்கு .எண்.132/2023–ல், கடந்த 18.11.2025–ம் தேதி, பிறப்புவித்திருக்கிற உத்தரவு மற்றும் உத்தரவாணைக்கு எதிராக பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**இடையே**

வெள்ளைச்சாமி ... மனுதாரர்/வாதி

// எதிராக //

1) விமலீஸ்வரபாண்டியன்
2) சின்னச்சாமி (இறப்பு)
3) முத்தையா ...எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இந்த உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டு வழக்கானது, என் முன்பாக கடந்த 09.03.2026–ம் தேதியில், இறுதி விசாரணைக்காக வந்தபொழுது, மேல்முறையீட்டாருக்காக, கற்றறிந்த வழக்குரைஞர் திரு. K.சூடாமணி அவர்கள் ஆஜராகியும், 1–ம் எதிர்மேல்முறையீட்டாளர் தோன்றாத்தரப்பினராகியும், 2–ம் எதிர்மேல்முறையீட்டாளர் இறந்துவிட்ட நிலையிலும், 3–ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. A.மீனாட்சி சுந்தரம் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இரு தரப்பு சாட்சியங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் மற்றும் விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் உத்தரவாணை படித்து பார்க்கப்பட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்,

<u>உ த் த ர வு:–</u>

மேல்முறையீட்டாளர்களால், இந்த உரிமையியல் பல்வகை மேல்முறையீடானது, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1–நீதிமன்றம் உசிலம்பட்டி, ஐ.ஏ.எண். 434/2023– இன் – அசல் வழக்கு எண்.132/2023–ல், கடந்த 18.11.2025–ம் தேதியில், பிறப்புவித்திருக்கிற உத்தரவு மற்றும் உத்தரவாணையை ரத்து செய்யக்கோரி இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**2) இம்மேல்முறையீட்டு குறிப்பாணையின் சுருக்கம்:–**

i) மேல்முறையீட்டாளர் அசல் வழக்கில் வாதி ஆவார். விசாரணை நீதிமன்றம் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் வாதியின் கோரிக்கைகளை தள்ளுபடி செய்யதது ஒருதலைப்பட்சமானது ஆகும். பொதுக் கிணற்றிலிருந்து வாதி பைப் மூலம் நீர் பாய்ச்சி வருகிறார். மேற்படி பொதுக்கிணற்றிலிருந்து நீர் பாய்ச்சி விவசாயம் செய்வதை 2–ம் பிரதிவாதி இடயூறு செய்கிறார். ஆகையால், பொது கிணற்றிலிருந்து விவசாயத்திற்கு நீர் பாய்ச்சும் உரிமையை 2–ம் பிரதிவாதி தடுக்க முடியாது. 3–ம் பிரதிவாதி வாதியின் பைப்களை சேதப்படுத்தியது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு புகார் மனு விசாரணையில் உள்ளது. 3–ம் பிரதிவாதிக்கு பொது கிணற்றிலிருந்து விவசாயம் செய்வதில் ஆட்சேபணை இல்லை என எழுதிக் கொடுத்திருக்கிறார் என்பதை விசாரணை நீதிமன்றம் பரிசீலனை செய்யவில்லை. ஆகையால், பொது கிணற்றிலிருந்து வாதி நீர் பாய்ச்சி விவசாயம் செய்வதை பிரதிவாதிகள் தடை செய்ய கூடாது என உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டும். இடைநிலை மனு எண். 434 / 2023 –இன் – அசல் வழக்கு எண். 132 / 2023–ல் கடந்த 18.11.2025–ல் விசாரணை நீதிமன்றம் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் உத்தரவாணையை ரத்து செய்து இம்மேல்முறையீட்டை அனுமதிக்க கோரி மேல்முறையீட்டாளரால் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) இம்மேல்முறையீட்டில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்?</u>**

இம்மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>4) பிரச்சனைக்குரிய தீர்வு:–</u>**

i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் / வாதி விசாரணை நீதிமன்றத்தில் காவல் நிலையத்தில் கொடுத்த புகார்களை ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரை குறியீடு செய்தார். தாவா சொத்தில் உள்ள பொது கிணற்றிலிருந்து மனுதாரர் / வாதிக்கு நீர் பாய்ச்சும் உரிமை உள்ளது என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மாறாக, மேல்முறையீட்டாளர் / வாதி இந்த மேல்முறையீட்டில் அடையும் குறைபாடானது, விசாரணை நீதிமன்றம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களை சரியாக பரிசீலனை செய்யவில்லை என்பதாகும். காவல் நிலையத்தில் கொடுத்த புகார்களை வைத்துக் கொண்டு மனுதாரர் / வாதிக்கு பொது கிணற்றிலிருந்து நீர் பாய்ச்சும் உரிமையுள்ளது என்பதை தெளிவுபடுத்த முடியாது.

ii) அடுத்ததாக, எதிர்மனுதாரர் தரப்பில், கடந்த 18.10.2021 அன்று முத்தையாகோன் அவர்கள் மகன் முத்தையா பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தின் நகல் எ.ம.சா.ஆ.1 ஆகவும், முத்தையா பெயரில் உள்ள சர்வே எண்.445/2பி–ற்கு ஏற்பட்ட 10(1) சிட்டா நகல் எ.ம.சா.ஆ.2 ஆகவும், 2–பிரதிவாதி மற்றும் பாண்டியராஜா பெயரில் சர்வே எண். 445/3ஏ–ற்கு ஏற்பட்ட 10(1) சிட்டா நகல் எ.ம.சா.ஆ.3 ஆகவும், முத்தையா பெயரில் உள்ள சர்வே எண். 445/3பி–ற்கு ஏற்பட்ட 10(1)

சிட்டா நகல் எ.ம.சா.ஆ.4 ஆகவும், சுரேஷ் பெயரில் சர்வே எண். 445/3சி–ற்கு ஏற்பட்ட 10(1) சிட்டா நகல் எ.ம.சா.ஆ.5 ஆகவும், அழகுலெட்சுமி பெயரில் சர்வே எண். 445 /3சி2–ற்கு ஏற்பட்ட 10(1) சிட்டா நகல் எ.ம.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்தார்.

iii) அடுத்ததாக, இடைநிலை மனு எண்.434 / 2023 உத்தரவாணையை பரிசீலனை செய்யும் பொழுது, சொத்து விபரமானது, சர்வே எண்.445/2பி மற்றும் சர்வே எண்.445/3 என்று உள்ளது. மேற்படி சர்வே எண். 445/2பி முத்தையா பெயரில் 10(1) சிட்டா உள்ளதாக எ.ம.சா.ஆ.2 தெளிவுபடுத்துகிறது. அதுபோன்று, சர்வே எண். 445 / 3ஏ, 1–ம் பிரதிவாதி மற்றும் பாண்டியராஜா பெயரில் 10(1) சிட்டா உள்ளதாக எ.ம.சா.ஆ.3 தெளிவுபடுத்துகிறது. ஆக, வழக்கிடைச் சொத்துக்கள் மனுதாரர் / வாதிக்கு உரிமைப்பட்டது அல்ல. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு உரிமைப்பட்டதாக தெரிய வருகிறது. மனுதாரர் / வாதி அசல் வழக்கில், தாவா வழக்கிடைச் சொத்தின் வழியாக நீர் பாய்ச்சி புழங்கும் உரிமை இருப்பதாக கூறவில்லை. தாவா அசல் வழக்கில் மனுதாரர் / வாதி உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளார். ஆகையால் தான், விசாரணை நீதிமன்றம் உத்தரவு பக்கம் 7 பாரா 12–ல், தாவா அசல் வழக்கானது, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரருக்கு, இந்த இடைநிலை மனு மூலமாக இடைக்கால தடை உத்தரவு வழங்குவது அசல் வழக்கில் கோரியுள்ள நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்குவது போன்று ஆகிவிடும் என தீர்மானித்து இடைநிலை மனு

எண்.434/2023—ஐ தள்ளுபடி செய்தது ஏற்புடையது ஆகும். ஆக, வாதிக்கு பொது கிணற்றிலிருந்து தண்ணீர் பாய்ச்சும் உரிமை உள்ளது என்பதை வழக்கு விசாரணையின் இறுதியில் தான் தீர்மானிக்க முடியும். ஆகையால், விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் உத்தரவாணையில் குறுக்கீடு செய்வதற்கு எந்த முகாந்திரமும் இல்லை . எனவே, விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் உத்தரவாணை உறுதி செய்து இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, விசாரணை நீதிமன்றம் இடைநிலை மனு எண். எண்.434/2023—ல் கடந்த 18.11.2025—ம் தேதியில், பிறப்புவித்திருக்கிற உத்தரவும் மற்றும் உத்தரவாணையும் இதன்மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டு, இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இம்மேல்முறையீட்டின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில்கொண்டு செலவுத்தொகை ஏதுமில்லை.

இவ்வுத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து — தட்டச்சருக்கு, நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்து பார்த்து, பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026—ம் ஆண்டு மார்ச் மாதம் 16—ம் நாள், திங்கட்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் வையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.16 13:14:54 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**இருதரப்பிலும் எவ்விதமான சாட்சியமும் முன்னிறுத்தப்படவில்லை.**

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.16 13:15:03 +0530

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.